மே 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of May 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

கடித எண். 11998/பக5(1)/2022-1, நாள் 17.05.2022

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள். (இணைப்பு)
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35. (இணைப்பு)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள். (இணைப்பு)

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி - தற்காலிக பணியிடங்கள் - 2011-12 ஆம் ஆண்டில் அரசு / நகராட்சி உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 1590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 6872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 8462 தற்காலிகப் பணியிடங்களுக்கு மே 2022-ஆம் மாதத்திற்கான ஊதிய கொடுப்பாணை வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 212, பள்ளிக் கல்வி (வ.செ.2) துறை, நாள், 23.12.2011.
2. அரசாணை (1டி) எண். 392, பள்ளிக் கல்வி [ப.க.5(1)] த் துறை, நாள். 03.10.2019
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க. எண். 000519/ எல்/ இ3/ 2022, நாள் 10.05.2022.

******

பார்வை 1ல் காணும் அரசாணையில், 2011-2012 ஆம் ஆண்டில் அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1590 முதுகலை ஆசிரியர் கூடுதல் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு 6752 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் சேர்த்து மைய அரசின் ஒப்புதல் பெறுவதை எதிர்நோக்கி கூடுதலாக 120 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 8462 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2ல் காணும் அரசாணையில், மேற்காணும் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2019 முதல் 31.12.2021 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3 மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2024 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கக் கோரி பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு மே 2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2024 வரை மேலும் மூன்றாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 1,590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 6,872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 8462 தற்காலிகப் பணியிடங்களுக்கு மே 2022-ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான மே 2022--ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

17/5/22

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக

17.5.22

5/6

**நகல்**

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6 (இணைப்பு)
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35. (இணைப்பு)
நிதி(கல்வி-II)த் துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இவ்வலுவலக ந.க.எண். 000519/எல்/இ3/2022 நாள்: 19.5.2022

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

19.5.22

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

19/5/2022

**<u>அரசு கடித எண். 11998/பக5(1)/2022, நாள் 17.05.2022 - இன் இணைப்பு</u>**

2011-12 ஆம் ஆண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட கூடுதல் முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் விவரம்.

| வ எண். | பணியிட விவரம் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடங்கள் தோற்று விக்கப் பட்ட அரசாணை | பாடவாரியான/ பள்ளிவாரியான பெயர் பட்டியல் வெளியிடப்பட்ட அரசாணை | கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பட்டதாரி ஆசிரியர் | (பழைய ஊதிய விகிதம்: ரூ.9,300-34,800+4,600 தரஊதியம்)/புதிய ஊதிய விகிதம்: நிலை-16, ரூ.36,400 - 1,15,700/- | 6,752 | அரசாணை (நிலை) எண்.212, பள்ளிக்கல்வித் துறை, நாள்.23.12.2011. | அரசாணை (நிலை) எண்.229, பள்ளிக் கல்வித் துறை, நாள்.04.09.2012. | அரசாணை (1டி) எண்.392, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள்.03.10.2019. [01.01.2019 - 31.12.2021] |
| | | | 120 | | | |
| 2. | முதுகலை பட்டதாரி ஆசிரியர் | (பழைய ஊதிய விகிதம்: ரூ.9,300-34,800+4,800 தரஊதியம்)/ புதிய ஊதிய விகிதம்: நிலை18, ரூ.36,900 - 1,16,600 | 1,590 | | அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக் கல்வித் துறை, நாள்.05.03.2012. | |
| மொத்தம் | | | 8,462 | | | |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்